**அகலவத்த பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அகலவத்த பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சற்கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது 2013 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்று முன்னர் பெறுவனவுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த வியாபார அனுமதிப்பத்திரம் ரூபா 10,000, வியாபார வரி ரூபா 6,880 மற்றும் ஏக்கருக்கான வரி ரூபா 2,373 மீளாய்வாண்டின் போது முதலில் பெறுவனவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு உரிய வருமானக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த ரூபா 19,253 தொகை திரண்ட நிதியத்திற்கு பதிவளிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான வருமானம் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டுக் கணக்கின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் செலவின கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூபா 29,575,556 தொகையான போதிலும் பரீட்சைமீதிக்கு ரூபா 29,389,080 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 22 செலவின விடயங்களுக்காக நிலுவையாகக் காணப்பட்ட செலவினம் ரூபா 4,615,880 ஆன போதிலும் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு ரூபா 14,046,734 தொகை ஆண்டின் போது செலுத்தப்பட

வேண்டிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக நாட்குறிப்புப் பதிவொன்றும் எழுதப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொடுப்பனவுப் பொழிப்பின் படி, 20 செலவின விடயங்களுக்குரித்தான ஆண்டிற்கான செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய செலவினங்கள் சீராக்கப்பட்டதை அடுத்து ஆண்டிற்கான செலவினம் ரூபா 22,178,943 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 27,468,023 ஆகக் கொண்டுவரப்பட்டு வருமானச் செலவினக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 5,289,080 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 04 வருமானத் தலைப்புகளின் பணப் பெறுவனவுகள் உரிய வருமானக் கணக்குகளில் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு சீராக்கப்படாது ரூபா 6,765,228 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சரியான வருமானம் ரூபா 7,038,802 தொகையானமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 273,574 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2013 ஏப்ரல் மாதத்தின் போது உறுதிச்சீட்டு இல. 61 இன் கடன்கொடுத்தோர் கொடுப்பனவுகளான ரூபா 99,745 கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது எதிர்வரும் ஆண்டிற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த வீதவரி, ஏக்கருக்கான வரி, வியாபார வரிக்காக முறையே ரூபா 83,689, ரூபா 2,599, ரூபா 6,950 தொகையும் காசுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு முற் பெறுவனவுக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் காசுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மீள குறித்த வருமானக் கணக்குகளும் வரவு வைக்கப்பட்டிருந்தன.

(ஏ) பொழிப்பு வருமானப் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் முத்திரை வருமானப் பெறுவனவுகள் ரூபா 5,906,422 தொகையான போதிலும் பேரேட்டுக் கணக்கிற்கு காசுப் பெறுவனவாக ரூபா 5,910,587 செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த வட்டித் தொகையான ரூபா 41,415 தொகையும் வீதவரி மற்றும் ஏக்கருக்கான வரிக்காக வழங்கப்பட்ட கழிவுத் தொகையான ரூபா 50,924 செலவினமாக வருமானச் செலவினக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கடன் அடிப்படையில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டியின் கடன் மீதித் தொகையான ரூபா 3,178,457 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சபையின் பொதுக் கணக்கிற்குரித்தான பொழிப்புச் செலவினப் பதிவேடு (பி.ச. 20) இன் பிரகாரம், ஊழியர் கடன் கொடுப்பனவுத் தொகை ரூபா 595,000 ஆன போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

வழங்கப்பட்டிருந்த கொடுப்பனவுப் பொழிப்பின் படி ஊழியர் கடன கொடுப்பனவு ரூபா 209,690 ஆகக் காணப்பட்டது. இவ்வாறே ஊழியர் கடன் நடைமுறைக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த ஊழியர் கடன் கொடுப்பனவுத் தொகையான ரூபா 776,673 உடன் ஆண்டின் மொத்த ஊழியர் கடன் கொடுப்பனவுகள் ரூபா 1,371,574 தொகையான போதிலும் பேரேட்டுக் கணக்கிற்கு ரூபா 916,454 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) செலுத்தப்பட வேண்டிய முத்திரை வரி பேரேட்டுக் கணக்கில் ரூபா 25,485 தொகையான பணக் கொடுப்பனவு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய கொடுப்பனவொன்று காசேட்டிலோ அல்லது கொடுப்பனவுப் பொழிப்புப் பேரேட்டிலோ பதியப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 156,807,819 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 6,465,286 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,062,678 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,538 | 2,226 | 468 |
| (ii) | வாடகை | 870 | 870 | 745 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 145 | 144 | 925 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 4,231,075 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 852,162 |

**2.2.3 ஏனைய வருமானம்**

1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்டது) அதிகாரச்சட்டத்தின் 8ஏ(1) ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த காணித் துணைப்பிரிவுகள் 2 இற்காக இணங்கல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிராத போதிலும் ரூபா 10,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை கைத்தொழில்

மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,164,481 தொகையான 6 கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகநெகும செயற்திட்டத்தின் கீழான கைத்தொழில்கள்

மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 120 கைத்தொழில்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இவற்றில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,771,902 பெறுமதியான 22 கைத்தொழில்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2013 ஆம் ஆண்டின் போது ரூபா 35,00,900 தொகையான பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த 67 கைத்தொழில்கள் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பெறுமதி ரூபா 9,425,967 தொகையான 18 கைத்தொழில்களுக்காக மதிப்பீடு மாத்திரம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 6,700,000 தொகையான 13 கைத்தொழில்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடவெல தலகஹலியத்த வீதி 1,2 மற்றும் 3 ஆம் கட்டம்

---

இவ் வீதியின் நீளம் 251 மீட்டர்களும், அகலம் 2.44 மீட்டர்களும் கற்கள் இடப்பட்டு பதித்துத் தயாரிப்பதற்காக ரூபா 1,500,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. 2014 பெப்ரவரி 19 ஆம் திகதி சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தருடன் கைத்தொழில் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- மறுசீரமைக்கப்பட்ட வீதி குறிப்பாக இனங்காணப்படுவதற்கு இயலுமானவகையில் வீதித் திட்டமொன்று (ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படும் பகுதிகள் உள்ளடங்கலாக) கோவைக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சுப் பணிப்பாளர் (மகநெகும) இன் 2009 திசெம்பர் 24 ஆம் திகதிய எம்எச்/எம்ஜீ/03/01/பீஎன் ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, வீதியில் பதிக்கப்படும் கற்களின் சம்பிந்தன அமுக்க சக்தி 7 நாட்களில் $N/mm^2$ 18 இற்கு அல்லது 28 நாட்களில் $N/mm^2$ 25 இற்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆகையால் வீதிக்கு கற்கள் பதிக்கப்படு முன்னர் கற்களின் சம்பிந்தன அமுக்க சக்தி பரீட்சிக்கப்பட்டு குறித்த தரத்திற்கு உடன்பட்டிருப்பின் அக் கற்கள் பதிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த கைத்தொழில் 2013 நவம்பர் 13 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்ததாக வேலைப் பூர்த்தி அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டதுடன் கற்களின் சம்பிந்தன அமுக்க சக்தி பரீட்சிக்கப்படுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மத்திய ஆய்வுகூடத்திற்கு 2013 நவம்பர் 20 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்தமையால் வீதிக்கு கற்கள் பதிக்கப்பட்டதையடுத்து குறித்த தரத்தை பரீட்சிப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அனுப்பிவைக்கப்பட்டிருந்த கற்களின் சம்பிந்தன அமுக்க சக்தி இன்மை 2013 நவம்பர் 28 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 832,932 செலவிட்டு பதிக்கப்பட்டிருந்த கற்கள் குறித்த தரத்திற்கு இணங்கியிருக்கவில்லை. நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் கடற்தொழில் அமைச்சால் 2014 சனவரி 03 ஆம் திகதி இச் செயற்திட்டத்தினால் செலவிடப்பட்ட ரூபா 1,418,854 தொகைக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் மீள சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

(ஈ) கொரகாகொட வென்தேசிவத்த வீதி

---

இவ் வீதி நீளத்தில் 88 மீற்றர்களும் அகலம் 2.44 மீற்றர்களுக்கும் கொங்கிரீட் கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 499,841 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. 2014 பெப்ரவரி 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி, 1.2 விடய இலக்கத்தின் கீழ் உள்ள வீதியின் உயர் நிலையை வெட்டி சமப்படுத்துவதற்காக ரூபா 19,669 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின்

தொடக்கத்திலிருந்து 28 மீற்றர்கள் அளவு தொலைவில் பதிக்கப்பட்ட கற்கள் புதையுண்டிருந்தன.

- வீதிக்குப் பதிக்கப்படும் கற்களின் சம்பிந்தன அமுக்க சக்தி 28 நாட்களில் ே.்.அஅ2 25 இற்குக் குறைவில்லாதிருக்க வேண்டியதுடன் இவ்வீதிக்குப் பதிக்கப்பட்ட கற்களில் தேவையான சம்பிந்தன அமுக்க சக்தி இன்மை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தர ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கடற்படை அமைச்சினால் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் மீள சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

(உ) கிரிகொல பட்டேவலகட குடி நீர் செயற்திட்டம்

---

மேற்குறித்த நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 978,224 தொகையான மதிப்பீட்டிற்காக 2012 திசெம்பர் 03 ஆம் திகதி கிரிகொல சமுர்திப் படையணியுடன் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 ஏப்ரல் 23 ஆம் திகதி இறுதிக் கொடுப்பனவாக ரூபா 1,148,048 தொகை செலுத்தப்பட்டு நீர்த்தாங்கிகள் தயாரிக்கப்பட்டு குழாய்கள் பொருத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. சாத்தியவள அறிக்கையின் படி, 600 நலன்பெறுனர்களை இலக்காகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இச் செயற்திட்டத்திலிருந்து இக் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி வரையிலும் நலன்பெறுனர்களுக்கு நீர் பெறப்படும் வகையில் வீதியின் இரு மருங்கிலும் நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டிராமையால் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

### 3.2 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

---

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(அ) இன் பிரகாரம், ஏதேனுமோர் செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகை அச் செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 1993 முதல் 2006 வரையான காலத்தின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 269,364 தொகையான முற்பண மீதி அறவிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் 2011 வரை பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 721,106 தொகை தொடர்பாக 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி வரையிலும் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 570, 571 மற்றும் 572 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மாதாந்தப் பங்களிப்புத் தொகை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் மாதாந்தப் பங்களிப்புத் தொகை குறித்த தினத்தில் செலுத்தப்பட்டிராமையால் 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆகஸ்ட் வரை ரூபா 88,234 தொகையான மிகைக்கட்டணத்தைச் செலுத்துவதற்கு நேர்ந்திருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரரி 18 ஆம் திகதி வரையிலும் அக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

(i) 1988 ஏப்ரல் 17 ஆம் திகதிய 55/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் XIV ஆம் அத்தியாயத்தின் 218 ஆம் பிரிவின் படி காணி கட்டிடங்கள் தொடர்பாக தலைவர்.'.உபதலைவர்.'.வேலை அதிகாரி.'. தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சபையின் செயலாளர் அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் என்பவர்களைக் கொண்ட ஆய்வுச் சபை ஒன்றின் மூலம் சபையிடமுள்ள 79 காணிகள் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1647(அ) ஏற்பாடுகளின் பிரகாரம், வாகனம் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ.'.2002.'.02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் படி கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) பாதீட்டுக் கட்டுப்பாடு
(iii) வருமான நிருவாகம்
(iv) சொத்து முகாமைத்துவம்
(v) ஒப்பந்த நிருவாகம்